International Journal of Applied Research 2017; 3(7): 456-462




**ISSN Print:** 2394-7500
**ISSN Online:** 2394-5869
**Impact Factor:** 5.2
IJAR 2017; 3(7): 456-462
www.allresearchjournal.com
Received: 06-05-2017
Accepted: 07-06-2017

**Dr. S Saraswathy**
Assistant Professor,
Department of Tamil,
Faculty of Science and Humanities, SRM University, Kattankulathur, Kanchipuram District, Chennai, Tamil Nadu, India

**Correspondence**
**Dr. S Saraswathy**
Assistant Professor,
Department of Tamil,
Faculty of Science and Humanities, SRM University, Kattankulathur, Kanchipuram District, Chennai, Tamil Nadu, India

# இலக்கண இலக்கியத்தில் திருநங்கைகள்

**Dr. S Saraswathy**

### முன்னுரை

பிறப்பால் ஒரு பாலினத்தைச் சார்ந்தவர்களும், சில உயிரியல் மாறுபாட்டினால் எதிர்பாலினமாக, பெண் உணர்வுடன், பல உளவியல் சிக்கல்களைக் கடந்து, தொடர்ந்து தங்கள் வாழ்வை நடத்துபவர்களை அலிகள், பேடிகள் என்றழைத்து வந்தனர்.

### திருநங்கையாக மாற்றத்திற்குண்டான காரணங்கள்

மனிதனில் பால்நிலை தீர்மானிக்கும் படிநிலைகள் பற்றிய பூரண தெளிவு அவசியம்.மனிதனில் பால்நிலை தீர்மானிக்கும் படிநிலை கருவில் நிகழ்கிறது. இது நிறமூர்த்தங்களாலும் ஹோர்மோன்களாலும் தீர்மானிக்கப்பட்டு உடல்கூற்றியல் சார்பாக வெளிப்படுத்தப்படுகிறது. பால்நிலையை தீர்மானித்தலானது. உள்ளக மற்றும் வெளியக இலிங்க உறுப்புக்கள் உருவாக்கம், மார்பு, உடல்நிலை முடி உருவாக்கம் ஆகியன பிரதான காரணியாகிறது. மனித கலங்களில் 46 நிறமூர்த்தங்கள், *23* சோடிகளாக காணப்படுகின்றது. இதில் 1 சோடி நிறமூர்த்தம் பால் நிர்ணயத்திற்கு பொறுப்பான இலிங்க நிறமூர்த்தங்கள் ஆகும் ஆணில் XY எனவும் பெண்ணில் XX எனவும் பொதுவாக இவ்விலிங்க நிறமூர்த்தங்கள் அமைத்திருக்கும்.

*ஒரு மடிய பிரிவினால் உருவாக்கப்படும் சூல்கள்* X *நிறமூர்த்தத்தினையே கொண்டிருக்கும். விந்தணுக்கள்* X *அல்லது* Y *நிறமூர்த்தத்தினை கொண்டிருக்கும். இவை இரண்டும் இணைந்து இரு மடிய கலம் உருவாகும் பொழுது* XX *பெண்ணாகவும்* XY *ஆணாகவும் உருவாகின்றது. இதில் நிறமூர்த்தத்தில் ஏற்படும் குளறுபடி காரணமாகவோ அல்லது ஹார்மோன்கள் காரணமாகவோ சுரப்பிகளில் பிரச்சனையே இருபாலினர்* (Intersex) *உருவாக காரணமாகிறது.*

உயிர் அணுக்களில் இருக்கும் *22* இணை குரோமோசோம்களுடன் ஒரு y மற்றும் பெண்பால் தன்மை ஏற்படுத்தக்கூடிய x இணையும் போது (46 xy) ஆண் உருவாகிறார். ஒரு x மற்றும் பெண்பால் தன்மையை ஏற்படுத்தக்கூடிய மற்றொரு x இணையும் போது (46xx) பெண் உருவாகிறார். இதிலிருந்து மாறுபட்டு சில சமயம் பெண் கருமுட்டை கூடுதலாக ஒரு x குரோமோசோம் அல்லது ஆணிலிருந்து வரும் y குரோமோசோம் கூடுதலாக ஒரு x அல்லது y குரோமோசோம் கருமுட்டையுடன் வந்து இணைவதால் பிறக்கின்ற குழந்தை ஆணாகவோ பெண்ணாகவோ அல்லது இரண்டும் இல்லாமலும், இரண்டுமாகவும் பிறப்பது. இருபாலினப் பிறப்பான மூன்றாம் பாலினப் பிறப்பாகி விடுகின்றது. (வே. சுமதி, அரவாணிகளின் வாழ்க்கை வரலாறு, ப. 200) அரவாணிகளை பல காலமாக அலி, பேடி, நபுஞ்சகன், சண்டன், பேடு, அண்ணகன், பெட்டையன் என்ற பெயர்களைக் கொண்டே அழைத்தனர். பேடி என்ற சொல்லுக்கு ஆண் உடலில் பெண் தன்மை மிகுந்திருக்கும் என்றும், அலி என்ற சொல்லுக்கு பெண் உடலில் ஆண் தன்மை மிகுந்திருக்கும் என்றும் கூறப்படுகிறது.

**இலக்கணப்பார்வையில் திருநங்கையர்**

மனித குல தோன்றலின் போதே ஆணும் அன்றி பெண்ணும் அன்றி வாழ்ந்து வரும் மனிதப்பிறவிகளே அரவாணிகள் என்று அழைக்கப்பட்டனர். இது பரம்பரையாக மாறுவதோ அல்லது மாற்றப்படுவதோ இல்லை. கரு உருவாகும் போதே X–Y குரோமோசோம்களின் சேர்க்கை விகிதத்தில் ஏற்படும் மாற்றம் தான் அரவாணிகள் என்று அறிவியலாளர்களின் கருத்து. இக்கருத்தினை தொல்காப்பியர் தமது நூற்பாவின் வழி அரவாணிகள் உடலளவில் ஆணாகவும், மனத்தளவில் பெண்ணாகவும் இருப்பதாகச் சுட்டியுள்ளார்.

> ”பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
> ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
> தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
> இவ்வென அறியும் அந்தம் தமக்கு இலவே
> உயர்திணை மருங்கின் பால் பிரிந்திசைக்கும்”
>
> (தொல்.487)

உயர்திணையில் ஆண்மை திரிந்து பெண் தன்மை மிக்க பேடி என்ற சொல்லும், தெய்வத்தைக் குறிக்கும் பெயர்ச்சொற்களும் இவை என அறியும் ஈறுகளை உடையன அல்ல. அதனால் உயர்திணை போன்றே ஆண், பெண், பலர் என்ற முப்பால்களாகப் பிரிந்து வழங்கும். பேடி வந்தாள், முருகன் வந்தான், பெருமாள் தந்தான், திருமகள் எழுந்தாள். அதாவது தொல்காப்பியர் தமது நூற்பாவின் வழி ஆண், பெண், தெய்வம் என்று கூறும் வகையினிலேயே பேடியையும் உயர்திணையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பெண் தன்மை மிகுந்தால் பெண்பாலிலேயே அழைக்கவேண்டும் என்றும் பெண்ணாக இருந்து ஆண் தன்மை மிருதியாக இருந்தால் ஆன் விகுதியினை வினை முடிவே கொடுக்க வேண்டும் என்றும் தொல்காப்பியம் கூறுகின்றது.

> ”ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
> ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே”
>
> (தொல். 495)

என்னும் நூற்பாவில் ஆண்மை திரிந்த பெண்ணாகிய பேடி என்ற சொல் ஆண்பால் விகுதி கொண்டு முடியாது. மாறாகப் பேடி வந்தாள் என்றே முடியும் என்று விளக்கம் அளித்துள்ளார். பேடி என்ற சொல் ஆண்பால் சொற்களை குறிக்கும் ஈறுகளுடன் வருவதற்கு இடமில்லை என்று கூறுகின்றது

நன்னூல் பார்வையில்,

"பெண்மைவிட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால்
ஆண்மைவிட்;டு அல்லாது அவாவுவ பெண்பால்
இருமையும் அக்றிணை அன்னாவும் ஆகும்"
(நன்னூல் 264)

பெண்மை விட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால் = பெண் தன்மையை விட்டு ஆண் தன்மையை அவாவுவனவாகிய பேடுகள் உயர்திணை ஆண்பாலாகும். ஆண்மை விட்டு அல்லது அவாவுவ (பேடு) பெண்பால் = ஆண் தன்மையை விட்டுப் பெண் தன்மையை அவாவுவனவாகிய பேடுகள் உயர்திணைப் பெண்பாலாகும், இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும் - இவ்விருவகைப் பேடுகளும் உயர்திணையாம் அன்றி அஃறிணையை ஒப்பனவும் ஆகும்.

"ஆண்பால் பெண்பால் அலியென நின்ற
"மூன்றே பால் என மொழிந்தனர் புலவர்"
(பன்னிருபாட்டியல்)

கடவுள் படைப்பில் ஆண் பெண் என்ற இனங்கள் தவிர அரவாணி என்ற மூன்றாவது ஓர் இனம் உள்ளது. ஆன்மீகமோ இவர்களை கடவுள் என்கிறது. அறிவியலோ இவர்களை குறைபாடு உள்ளவர்கள் என்று கூறுகிறது. சமூகமோ இவர்களைக் கேலியாகப் பார்க்கிறது. இவ்வுலகம் அவர்களை ஓர் உயிரினமாகக் கூட கருதுவதில்லை. அவர்களுக்குரிய உரிமையும் அளிப்பதில்லை. இலக்கண நூல்களை ஆய்வு மேற்கொள்ளும்போது அதில் திருநங்கைகள் பற்றி பல நிகண்டுகள் விளக்கம் தருகின்றன.

"பேடி இலக்கணம் பேசுங்காலை
நச்சுப் பேகலும், நல்லுரை ஓர்தலும்
அச்சு மாறியும், ஆண் பெண் ஆகியும்
கைத்தலம் ஒன்றைக் கடுக வீசியும்,
மத்தகத்து ஒரு கை மாண்புற வைத்தலும்
விலங்கி மதித்தும் விழிவேறு ஆகியும்,
துளங்கிக் தூங்கிச் சுழன்று துணிந்தும்,
நாக்கு நாணியும், நடம்பல பயின்றும்,
பக்கம் பார்த்;தும், பங்கி திருத்தியும்,
காரணம் இன்றிக் கதம்பல கொண்டும்
வார் அணி கொங்கையை வலிய நலிந்து
இரங்கியும், அழுதும், அயர்ந்தும், அருவருந்தும்,
குரங்கியும், கோடியும், கோதுகள் செய்தும்,
மருங்கில் பாணியை வைத்தும், வாங்கியும்
இரங்கிப் பேசியும், எல்லேல் என்றும்
இன்னவை பிறவும் இயற்றுதல் இயல்பே"
எனக்கூறியுள்ளது.

**இலக்கியப்பார்வையில் திருநங்கையர்**

பன்னிராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியம் கொண்ட தமிழர்களோடு அவர்களும் இணைந்து வாழ்ந்து வந்துள்ளனர் எனபதை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அந்த அளவிற்கு திருநங்கைகள் நமது சமூகத்தோடு ஒன்றி வாழ்ந்து வருகின்றனர் என்பதை கீழ்க்கண்ட சான்றுகளின் வழி அறியமுடிகின்றது.

**மகாபாரதம்**

சிகண்டியின் வரலாறும் மகாபாரததில் ஒரு திருநம்பியின் வெளிப்பாடே. காசி அரசனுக்கு மூன்று மகள்கள் அம்பா, அம்மிகா, அம்மாலிகா. இவர்களின் சுயம்வரத்தில் பீஸ்மர் அங்கிருந்த மன்னர்களை தோற்கடித்து அம்மூவரின் விருப்பத்திற்கு எதிராக அஸ்தினாபுரத்து அரசன் விசித்திரவீரியனுக்கு மணம் முடிக்க கொண்டு சென்றார். ஆனால் அம்பா சால்வ நாட்டு மன்னிடம் மனதை பறிகொடுத்திடுந்தாள். எனவே விசித்திரவீரியனை அம்பா மணந்து

கொள்ளாது அவள் தங்களை மணந்து கொள்கிறான். அம்பா தான் விரும்பியவனை நாடிச்சென்றாள். அவளை பீஸ்மர் ஜெயித்து சென்றதால் சால்வநாட்டு மன்னன் அவளை ஏற்க மறுத்தான். பீஸ்மரிடம் திரும்பி வந்ம அம்பா தன்னை மணந்து கொள்ளும் படி வற்புறுத்தினாள். ஆனால் பீஸ்மர் தன் தாய் கங்காதேவிக்கு செய்த சத்தியமாக பிரம்மச்சரியத்தை மீற மாட்டேன் எனக்கு கூறி அவள் வேண்டுகோளை மறுத்தார். இதனால் அவமானமும் கோவமும் அடைந்த அம்பை பிஸ்மரை பழிவாங்க கடும் தவம் புரிந்து மறுபிறவி எடுக்கிறாள். பிஸ்மர் குருசேத்திரத்தில் அர்ச்சுனனின் அம்புபடுக்கையில் உயிர் துறக்கிறார். பீஸ்மர் பெண்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்த மாட்டேன் எனும் கொள்ளை உடையவர். அதே நேரம் பெண்கள் அக்காலத்தில் யுத்தகளத்திற்கு யுத்தம் செய்ய செல்வது மரபு இல்லை. எனவே சிகண்டி பெண்ணாகப் பிறந்து ஆணாக தன்னை வெளிப்படுத்தி வந்த சிகண்டி ஆண்வேடம் தரித்து களம் சென்று பீஸ்மரை வீழ்த்துகின்றாள். ஆகா சிகண்டி என்ற கதா பாத்திரம் திருநம்பியின் வெளிப்பாடே எனக் கொள்ளலாம்.

"மான்மதச் சாந்தும் வரி வெண்சாந்தும்
கூனும் குறளும் கொண்டன ஒருசார்
வண்ணமும் சுண்ணமும் மலர்பூம் பிணையலும்
வெண் அணிப் பேடியர் ஏந்தினார் ஒருசார்"

(சிலம்பு – நடுகற் காதை 57-60)

கஸ்தூரிக்குழம்பையும், தொய்யில் எழுதும் வெண் சந்தனத்தையும், கூனரும் குள்ளரும் ஏந்தி நிற்கின்றனர். அப்போது பெண் போல் அழகுடைய பேடிகள் (அரவாணிகள்) சுண்ணப்பொடிகளையும், வாச மலர் மாலைகளையும் ஏந்தி நிற்கின்றனர் என்பதன் மூலம் பேடிகள் என்றழைக்கப்படும் அரவாணிகள் அரண்மனை அந்தப்புரங்களில் அரசியர்களுக்குப் பணிவிடைகள் செய்யும் சேடிப் பெண்களாக இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களில் பேடிக்கூத்து என்ற சொல்வடிவம் பயன்பாட்டில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 'காமன் ஆடும் பேடாடலும்' என்கிறது சிலப்பதிகாரம் (அரங்கேற்றும் காதை 22) இது வாணாசுரன் நகரத்திலிருந்து தன் மகனாகிய அநிருத்தனை சிறை நீக்க ஆண் திரித்து பெண் கோலத்துடன் காமன் ஆடிய கூத்தை குறிப்பதாகும்.

தமிழின் முதல் தத்துவ நூல் எனப் போற்றப்படும் நீலகேசி"பேடி வேதனை பெரி தோடி யூரு மாதலாற் சேடி யோடு வண்யிற் கூடியாவதில்லை"என்று திருநங்கையின் துன்பம் பற்றி இவ்வாறு கூறுகிறது.

## புறநானூறு

"சிறப்பு இல் சிதடும் உறுப்பு இல் பிண்டமும்
கூனும் குறறும் ஊனமும் செவிடும்
மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு
எண்பேர் எச்சம் என்று எவை எல்லாம்
பேனதமை அல்லது ஊதியம் இல்"

(புறநானூறு 28)

புறநானூற்றில் சோழன் நலங்கிள்ளியைப் புகழ்ந்து பாடும் உறையூர் முதுகண்ணன் சாத்தனர் தமது பாடலில் மக்களில் குறையுடையவர்களை எட்டுவகைப்படுத்தியுள்ளார். அவை குருடு, வடிவற்ற தசைத்திறன், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள் ஆகியவையாகும்.இதில் வடிவற்ற தசைத்திறன் அரவாணியைக் குறிக்கப்பயன்படுத்தியுள்ளார்.

எனக் கூறுகின்றது

**திருக்குறள்**

"பகையகத்து பேடிகை ஒவ்வாள் அவையகத்து
அஞ்சும் அவன் கள்ள நூல்"
(குறள் 727)

போர்க்களத்தில் பேடியின் கையில் உள்ள கத்தி போல் சபை ஒடுக்கம் கொண்டவன் கற்ற கல்வி யாவும் சபையில் பயனற்று போகும் என்று திருநங்கைகள் குறித்து வள்ளுவர் தமது குறளில் பதிவு செய்துள்ளார்.

**நாலடியார் பார்வையில்**

"செம்மையொன்றில் சிறியார் இனத்தவராய்க்
கொம்மை வரி முலையாள் தோள் மரிஇ உம்மை
வலியால் பிறர்மனை மேல் சென்றாரே இம்மை
அலியாகி ஆடி உண்பர்"
(நாலடியார் 35)

*முற்பிறப்பில் தமது வலிமையில் பிறர் மனைவியை கவர்ந்து சென்றவரே இப்பிறப்பில் அலித்தன்மை கொண்டு பிறக்கின்றனர். இவ்வாறு பிறக்கின்றவர் வயிற்றுப்பிழைபிற்காகத் தெருக்களில் வாழ்கின்றவர்கள் என நாலடியாரில் அலிபிறப்பு பற்றி கூறப்படுகிறது.*

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது
அதன்னும் அரிது கூன் குருடு செவிடு பேடு
நீங்கப் பிறத்தல் அரிது"

என்னும் ஔவையின் பாடல் மூலம் மனிதப்பிறப்பின் மகத்துவத்தை அறியமுடிகிறது. கூன், குருடு, செவிடு, பேடு போலவே பேடு என்பதும் ஒருவகை குறைதான். பேடு என்ற குறையுடைய மூன்றாம் பாலினமாக சொல்லப்படும் நபர் தான் இன்று திருநங்கைகள் என்னும் பெயரில் அழைக்கப்படுகின்றனர். பெயரில் மாற்றம் ஏற்பட்டாலும் இன்றளவும் அவர்களின் வாழ்க்கையில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படாமல் மனித சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகவும், தீண்டத்தகாதவர்களாகவும் ஒதுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். தங்களை ஆண் என்றும், பெண் என்றும் கூறிக்கொள்ளமுடியாமல் சமூகத்தில் மூன்றாம் பாலினமாக வாழ்ந்து வருகின்றனர். பெண்கள் இவர்கள் பார்க்கும் போது வேண்டாவெருப்புடனும், ஆண்கள் ஆபாசப் பிறவிகளாகவும் பார்க்கும் நிலையே இன்றும் நிலவி வருகின்றது. தொல்காப்பியரும் இவர்களை ஆண்மைத்திரிந்தவர்களை உயர்திணையில் பெண்பாலில் (மரியாதைநிமித்தமாக) அழைக்கவேண்டும் என்று கூறியுள்ளார். ஆனால் இன்று அறிவியல், தொழில் நுட்பவளர்ச்சி அடைந்திருக்கும் காலக்கட்டத்திலும் அவர்களை அஃறிணைப் பொருளாகக் கூட மக்கள் மதிக்கவில்லை.

திருஞானசம்பந்தர் தமது பாடலில்,

"விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தீ
பெண்ணா ணலியாகும் பித்தா பிறைசூடீ
எண்ணா ரெருக்கத்தம் புலியூ ருறைகின்ற
அண்ணா வெனவல்லார்க் கடையா வினைதானே"
(தேவாரம் 961)

விண்ணவர் தலைவனே. வேறுபட்ட வடிவும் பண்பும் உடையவனே, விடைமீது ஏறிவருபவனே! பெண், ஆண், அலி என்னும்

திணை பால் பாகுபாடுகளைக் கடந்துள்ளவனே, பித்தனே, பிறை சூடியவனே, எல்லோராலும் எண்ணத்தகும் எருக்கத்தம் புலியூரில் உறைகின்ற தலைவனே என்று போற்றியுள்ளார். பெண் ஆண் அலியாகும் - பால் பாகுபாட்டையும் திணைப்பாகுபாட்டையும் கடந்தவன் என்பது கருத்தாகும்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில்,

"யாவரும் பெறவுறும் ஈசன் காண்க!
தேவரு மறியாச் சிவனே காண்க!
பெண்ஆண் அலியெனும் பெற்றியன் காண்க!
கண்ணால் யானும் கண்டேன் காண்க!
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க!"

(திருவாசகம்- திருவண்டை பகுதி 55-59)

தேவரும் அறிய முடியாத சிவபெருமான். பெண் ஆண் அலி என்னும் பாகுபாடுகளில் கலந்துள்ள தன்மையன். அப்பெருமானை நானும் கண்ணால் கண்டேன் என்றும், அதனைத்தொடர்ந்து

"மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்,
இத்தந் திரந்திற் காண்டும்என் றிருந்தோர்க்
கத்தந் திரந்தி னவ்வயி னொளித்தும்,
முனிவற நோக்கி நனிவரக் கவ்வி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென ஒளித்தும்"

(திருவாசகம்- திருவண்டை பகுதி 130-135)

என்ற பாடலில், ஆண் போலத் தோன்றியும், அலி போல இயங்கியும், ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண் போலக் காணப்படும் தன் இயல்பைக் காட்டாது மறைந்தும், தூரத்தில், ஐம்புலன்களைப் போக நீக்கி, அரிய மலைதோறும் சென்று, பொருந்தின பற்றுகளை எல்லாம் விட்ட, வெற்றுயிரோடு கூடிய உடம்பையுடையசிவபெருமான் என்று கடவுளை வழிபடுத்தும் இடத்து திருநங்கை குறித்த செய்தியும் அவர்களது இயல்பும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பெண்ணாகி ஆணாய் அலியுமாய் பிறங்கொள்சேர்"என்று திருவாசகத்திலும், "ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்"என்று திருவாய்மொழியிலும் ஆண்டென் அலியுரு வாய்நின்ற ஆதியை"என்றுதிருமந்திரத்திலும் கூறப்பட்டுள்ளதை நோக்கினால் இந்து சமயக் கடவுளரை மூன்றுபாலினமாக உருவகப்படுத்தியுள்ளமை தென்படுகிறது. இதுமட்டுமன்றி சோதிடத்தில் புதன் மற்றும் சனி ஆகிய நாட்கள் அலி நாட்கள் எனப்படுவதுடன் மிருகசீடம், சதயம், மூலம் ஆகிய நட்சத்திரங்கள் அலி நட்சத்திரங்கள் எனவும் அழைக்கப்டுகின்றன். மேலும் சிவன் அர்த்நாரீஸ்வர அவதாரம் எடுத்துக் கொண்டதாகவும் விஸ்ணு மோகினி அவதாரம் எடுத்துக் கொண்டதாகவும் புராணங்கள் கூறிநிற்கின்றன.

திருமூலர் தமது திருமந்திரத்தில் மூச்சுக்காற்றின் இயல்பிற்கேற்ப பிறக்கும் குழந்தையின் பால் வேறுபாடு மாறும் என்பதை,

"குழவியும் ஆணாய் வலத்து வாகில்
குழவியும் இரண்டாம் அபாகக் எதிர்க்கில்
குழலி அலியாகும் கொண்டக்கால் ஒக்கியே"

(*திருமந்திரம்* 446)

என்ற வரிகளில் விளக்கியுள்ளார். அதாவது சுவாச உயிர்ப்பு இருவரும் மருவுங்காலத்து

வலது மூக்கின் வழி வந்து கொண்டிப்பதாக பிறக்கும் மகவு ஆண். இடது மூக்கின் வழி வந்து கொண்டிருந்தால் பெண்ணாகும் இரண்டு மூக்கினால் ஒத்து வந்து கொண்டிருந்தால் பிறப்பது அலியாகும் எனக் கூறுகிறது.

**முடிவுரை**

சமகாலத்தில் புரிதலில் உள்ள பிரச்சனை இருபாலினரையும் மாற்றுப்பாலினரையும் ஒன்றாகக் கருதுதலும் அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை அறிந்து கொள்ளாமல் விவாதத்தில் ஈடுபடுதலும் ஆகும். மாற்றும்பாலினர் நம் சமூகக்க கட்டமைப்பு உருவாகிய காலத்திலிருந்தே வாழ்ந்து வருகின்றார்கள். தற்காலத்தில் அவர்கள் வீட்டில் இருந்து வெளியேறி தனியாக ஒரு குழுஅமைத்து வாழும் முறையினைப் பின்பற்றி வருகிறார்கள் வீட்டில் ஏற்படும் தேவையற்ற பிரச்சனைகள் மனஅழுத்தங்கள் என்று பல காரணங்கள் வீட்டை விட்டு வெளியேறுவதற்கு பின்புலமாக இருந்தாலும் அவர்கள் அவ்வாறு சிறுகுழுக்களாக சிறிய வட்டத்தினுள் ஒடுங்கிக் கொள்ளுவதால் அவர்கள் வெளியுலக தொடர்பை துண்டித்துக் கொள்கிறார்கள் இச்செயற்பாடு ஆரோக்கியமானதா என்பது கேள்விக்குரியதே மேலும் மாற்றுப்பாலினர் தம்மை இருபாலினராக சமூகத்திற்று அடையாளம் காட்டிக் கொண்டு இது நிறமூர்த்தக் குறைபாடு, இயற்கையின் சாபம் என கூறிக் கொள்வது எவ்வித்திலும் பொருத்தமற்றதன்று. மூன்றாம் பாலினம் என்ற சொல்லுக்கு பதிலாக திருநங்கைகள் என்று அழைக்கப்படும் இவர்களுக்கு இன்று சமூகத்தில் உரிய அங்கீகாரமும் அடையாளமும் கிடைக்கத்தொடங்கியிருக்கிறது.அவர்கள் தங்களுக்குள் இருக்கும் மனத் தடைகளையும், குழப்பங்களையும் மற்றும் உடல் ரீதியாக ஏற்படும் பிரச்சனைகளையும் குறித்து விழிப்புணர்வு பெற்று தெளிவான நல்ல சிந்தனையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மனித இனம் ஆண் பெண், அரவாணி என்ற நிலை பெற வேண்டும் ”மனிதனை மதிக்கத்தெரியாத மனிதன் மக்கள் அல்ல மாக்கள்”(மாக்கள் – விலங்கு) என்றார் விவேகானந்தர். நம்மில் ஒருவராகப் பிறந்து நம்மோடு சேர்ந்து வாழத்துடிக்கும் திருநங்கைகளின் உணர்வுகளை மதிப்போம், அவர்களின் நல்வாழ்விற்கு வழிவகுப்போம் என்று நாம் ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக்கொள்வதே அவர்களின் வாழ்க்கையின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.